# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 23, 2026 Weekly E-paper • May 23, 2026


# தமிழ்நாடும், தவெக ஆட்சியும்!

சுப.வீரபாண்டியன்



## சமூகச் சீர்திருத்தமும் சட்டம் ஒழுங்கும்!

காசு.நாகராசன்

## மாற்றமா? ஏமாற்றமா?

தலையங்கம்

## நீட் உணர்த்திய விஜய்யின் உண்மை முகம்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 23, 2026

Weekly E-paper ● May 23, 2026


# தமிழ்நாடும், தவெக ஆட்சியும்!

சுப.வீரபாண்டியன்

தமிழ்நாட்டில் இன்றைய ஆட்சியின் எதிர்காலம் குறித்து, இரண்டு விதமான கருத்துகள் கூறப்படுகின்றன!

ஒன்று, அனுபவம் அற்ற முதலமைச்சர், அமைச்சர்களிலும் பலர் அனுபவம் அற்றவர்கள், சிலர் குற்றப் பின்னணி உடையவர்கள்! இந்த நிலையில் இந்த ஆட்சி ஆறு மாதம் கூடத் தாங்காது என்பது!

இன்னொன்று, முதலமைச்சர் விஜய் மீது தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களும், இளம் பெண்களும் ஒரு விதமான வெறி கொண்ட பற்றுதலோடு இருக்கிறார்கள். எனவே இன்னும் 10, 15 ஆண்டுகளுக்கு தவெக ஆட்சிதான் தமிழ்நாட்டில் தொடரும் என்பது!

எண்ணிப் பார்த்தால், இரண்டுமே அவரவர் விருப்பம் சார்ந்த கருத்துகளாகவே இருக்கின்றன!

ஓர் ஆட்சியின் எதிர்காலம் குறித்துக் கணிப்பதற்கு, இரண்டு வாரங்கள் என்பது மிக மிகக் குறுகிய காலம்! இன்னும் சில மாதங்களாவது கழிந்த பிறகுதான், யாரும் எந்த ஒரு முடிவுக்கும் வர முடியும்!

இப்போதைக்குப் பிரிந்து வந்த 25 அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களை நம்பாமல், விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லிம் லீக் கட்சி உறுப்பினர்களை அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டிருப்பது ஒரு புத்திசாலித்தனம்.

முதலில் அந்த 25 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு, தங்களுக்கான பெரிய வலிமை என்றும், அவர்களின் ஆதரவு கிடைத்து விட்டதால், இனிமேல் விடுதலைச் சிறுத்தைகள், பொதுவுடமைக் கட்சியினர், முஸ்லிம் லீக் ஆகியோரை நம்பி இருக்க வேண்டியதில்லை என்றும் தவெக முதலில் கருதி இருக்கக்கூடும்! அதனால்தான் அந்த 25 பேரை, முதலமைச்சர் நேரில் பார்த்து, பொன்னாடை எல்லாம் போர்த்தி மகிழ்ந்தார்!

பிறகு அவர்களை நம்புவதில் இருக்கும் ஆபத்து, விஜய் அவர்களுக்குப் புரிந்திருக்கக் கூடும்! பிரிந்து வந்தவர்கள், அந்தக் கட்சியின் மூன்றில் இரண்டு பங்கு



எண்ணிக்கைக்கும் குறைவாக இருப்பதால், கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் படி (Anti-defection law) எந்த நேரமும் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழக்கக்கூடும் என்பதை உணர்ந்து இருப்பார்!

இனிமேல், தேர்தல் பரப்புரையில், யாரைத் தீய சக்தி என்று விஜய் குறிப்பிட்டாரோ, அந்தத் தீய சக்தியின் ஆதரவில் வெற்றி பெற்றவர்களை நம்பித்தான் காலத்தை ஓட்ட வேண்டும்! இருப்பினும் அவர்களை அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டது ஒரு விதமான பாதுகாப்பு!

என் போன்றவர்களின் பார்வையில், அவர்களை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டது, ஆளுங்கட்சிக்கு வெற்றி! விடுதலைச் சிறுத்தைகளுக்கும், முஸ்லிம் லீக் கட்சிக்கும் தோல்வி என்றுதான் கூற வேண்டும்! அமைச்சரவையில் இடம் பெறுவதற்காக நாங்கள் வரவில்லை. ஆளுநர் ஆட்சி வர வேண்டாம் என்பதற்காகவே ஆதரவு தந்தோம் என்று கூறியிருந்தால், அது ஒரு தனி மரியாதையைப் பெற்றுத் தந்திருக்கும்!

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## முன்பக்கத் தொடர்ச்சி...

எழுச்சித் தமிழர் திருமாவளவன் அவர்களிடமும், அய்யா காதர் முகைதீன் அவர்களிடமும் நாம் எதிர்பார்த்தது அந்தத் தலை நிமிர்ந்த தன்மானத்தைத்தான்!

அதிமுகவிலிருந்து பிரிந்து வந்த 25 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, மாபெரும் தோல்வியும், அதிர்ச்சியும் கிடைத்துள்ளது என்றே கூறலாம்! (குறிப்பாக, சி.வி. சண்முகம் போன்றோரின் கனவு தகர்த்து சுக்குநூறாக ஆகிவிட்டது என்கின்றனர். சிவிஎஸ் தன் எம்.பி. பதவியை விட்டு விலகி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். இப்போது அமைச்சர் கனவும் கலைந்து, எம்எல்ஏ பதவியும் போய்விடும் போலத் தெரிகிறது)



“அவ்வளவு பெரிய அறிவாளிக்கு, திருமாவளவன் தோள் மீது கை போட்டுக் கொள்ளத் தெரிகிறதே தவிர, அறநிலையத்துறை அமைச்சர் எந்த ஜாதி என்று தெரியவில்லையாம்! ௬0 நாள்களில் ஊழலை ஒட்டுமொத்தமாக ஒளித்து விடுவாராம்!”

ஆளுங்கட்சியின் முகம் கொஞ்சம் கொஞ்சமாக அம்பலப்பட்டுக் கொண்டிருக்கிறது. முதலமைச்சர், தலைமைச் செயலகத்தில், தன் இருக்கையில் அமர்ந்து, மதிய உணவு உண்ணும் காட்சியில் இருந்து (அது வெறும் AI), அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் கல்வித் தகுதி, சொத்து மதிப்பு வரையிலான பல பொய்கள் இப்போது வெளியாகி உள்ளன!

மேடைகளில் வீரம் கொப்பளிக்க பேசிய விஜய், முதலமைச்சர் ஆன பிறகு சட்டமன்றத்தில், பத்திரிக்கையாளர்கள் முன்னிலையில் ஏதும் பேசத் தெரியாதவராக அமர்ந்திருப்பதைப் பார்க்கிறோம்.

அப்படியானால், மேடையில் அவ்வளவு வீரமாகப் பேசினாரே, அது எப்படி? வேறொன்றுமில்லை, அது "கேமரா, ஆக்சன்" என்பதுதான் எனப் புரிகிறது!

தேர்தல் வாக்குறுதிகளை அள்ளிவிட்ட முதலமைச்சர், பதவி ஏற்றவுடன், 10 லட்சம் கோடி கடனா இருக்கிறது என்று கேட்பது, அப்பாவித்தனம் இல்லை, அறியாமையின் வெளிப்பாடு!

அறிவிக்கப்படாத மின்வெட்டு, இன்று பல ஊர்களில் நடைமுறையாகி இருக்கிறது! பல மணி நேரம் மக்கள் இருளில் தவிக்கின்றனர்!

இவற்றை எல்லாம் சமாளிப்பதற்கு, இந்த அமைச்சரவையில்தான் பட்டியலினத்தைச் சேர்ந்த அமைச்சர்களின் எண்ணிக்கை கூடுதல், நான்கு பெண்கள் அமைச்சர்கள் ஆகியிருக்கின்றனர் என்றெல்லாம் கூறிக் கொண்டிருக்கிறார்கள்!

இவற்றை நாமும் பாராட்டுகிறோம். ஆனால் இவை மட்டுமே ஒரு நல்லாட்சிக்குப் போதுமானவை அல்ல என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்!

பிரதமர் மோடி போன்றவர்களும், இது போன்ற வித்தைகளை ஏற்கனவே செய்து காட்டி இருக்கிறார்கள்! 2019 மக்களவைத் தேர்தலில், பாஜகவின் 33 எம்பிகளில் -

113 பேர் OBC

53 பேர் SC

43 பேர் ST

பிரிவைச் சேர்ந்தவர்கள்! அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட பாஜகவில் எம்.பி.க்களில் 68.9% அவர்கள் இருந்தனர். ஆனால் நடைமுறையில் அவருடைய ஆட்சி என்னவாக இருக்கிறது, யாருடையதாக இருக்கிறது?

இவற்றையெல்லாம் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். எண்ணிக்கை என்பது வெறும் அடையாளம் மட்டுமே! அந்த எண்ணிக்கையைத் தாண்டி ஓர் அரசு யாருக்காகச் செயல்படுகிறது என்பதைப் பொறுத்தே, அது பற்றிய மதிப்பு ஏற்படும்!

இன்னொன்றையும் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும்! முதலமைச்சர் பேசா மடந்தையாக இருப்பதும், ஆதவ் அர்ஜுனா ஒரு நிழல் முதலமைச்சரைப் போலச் செயல்படுவதும், அரசுக்கும், நாட்டுக்கும் நல்லதில்லை! ஆனால் அவ்வளவு பெரிய அறிவாளிக்கு, திருமாவளவன் தோள் மீது கை போட்டுக் கொள்ளத் தெரிகிறதே தவிர, அறநிலையத்துறை அமைச்சர் எந்த ஜாதி என்று தெரியவில்லையாம்! 60 நாள்களில் ஊழலை ஒட்டுமொத்தமாக ஒளித்து விடுவாராம்!

அவர் உருவம் மட்டுமில்லை, அவர் பேசும் தொனியிலும், ஆணவம் உயரமாகத்தான் இருக்கிறது!

அர்த்த ராத்திரியில் குடை பிடிக்கிறவர்கள் யார் என்று, நம் ஊர்ப் பழமொழி நமக்குச் சொல்லி இருக்கிறது!

மக்கள் வாக்களித்திருப்பது ஆட்சி செய்வதற்குத்தான், அராஜகம் செய்வதற்கு இல்லை

# சமூகச் சீர்திருத்தமும் சட்டம் - ஒழுங்கும்!

காசு.நாகராசன்

சட்டம் - ஒழுங்கு சரியில்லை!

நாடு முழுவதும் போதை கலாச்சாரம் பரவி விட்டது!

பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை!

சிறுமி முதல் முதியோர் வரை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்! கொலை, கொள்ளை தொடர்கதையாக இருக்கிறது! என்று, கடந்த திராவிடமாடல் ஆட்சியின்போது பாஜகவின் அண்ணாமலைய் தொடங்கி எடப்பாடி பழனிசாமி வரை பலரும் கத்திக் கொண்டிருந்தார்கள்.

2021 - 2026 திராவிடமாடல் ஆட்சியில் செயல்படுத்தப் பட்ட மக்கள் நலத்திட்டங்கள், தொழில் - வேலை வாய்ப்புகள் மற்றும் உற்பத்திப் பெருக்கம், பொருளாதார முன்னேற்றம், உள்கட்டமைப்புகள், கல்வி - மருத்துவம் போன்ற துறைகளில் பல மடங்கு சாதனை என வளர்ந்து கொண்டிருந்த தமிழ்நாட்டின் உண்மை நிலையை மறைத்து தமிழ்நாடு முழுவதும் வன்முறையும், கொலை வெறியும், பாலியல் கொடுமையும், ஜாதி ஆணவப் படுகொலைகளும் மட்டுமே நடைபெறுவதைப் போல ஒரு பிம்பத்தைக் கட்டமைத்தார்கள்.

அவற்றை எல்லாம் தொலைக்காட்சிகள் 'பிரேக்கிங் நியூஸ்' போட்டு மக்களைத் தடுமாற வைத்தார்கள். தேர்தல் முடிவுகளையே திசைதிருப்பினார்கள்.

இப்போது நாடு முழுவதும் போதைப்பொருள் நடமாட்டம் தடுக்கப்பட்டு விட்டதா? பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் நின்று விட்டனவா?

சட்டம் - ஒழுங்கு முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதா ?

இல்லையே!இப்போதும் செய்தித்தாள்களில் பக்கம் பக்கமாக மேற்கண்ட குற்றங்கள் செய்திகளாக வருகின்றன. குறிப்பாக பல இடங்களில் தெருச் சண்டைகளிலும் பாலியல் குற்றங்களிலும் விஜய் கட்சியின் பொறுப்பாளர்களே ஈடுபட்டு, அதுவும் இப்போது அம்பலப்பட்டு வருகின்றது.

இவற்றை எல்லாம் ஏன் தூய சக்திகளால் தடுக்க முடியவில்லை?

போதை பழக்கத்தில் இருந்து இளைஞர்களை விடுவிக்க வேண்டும்! பெண்களுக்கு எதிரான பாலியல் குற்ற சிந்தனையில் இருந்து ஆண்களை மாற்ற வேண்டும்! வன்முறை, கொலை - கொள்ளை என்கிற கொடூர குற்றங்கள் நிகழாத வண்ணம் சமூகத்தை சீர்திருத்த வேண்டும்! இவையெல்லாம் சமூகத்தில் செய்யப்பட வேண்டிய பணிகள். இவற்றை எந்த ஒரு அரசியல் கட்சியும் ஆட்சியும் தனியே செய்து விட முடியாது. மக்கள் நலனில் அக்கறை கொண்டு தேர்தல், பட்டம், பதவி, பணம் எதற்கும் ஆசைப்படாத, சமூகப்பற்றும் அக்கறையும் உள்ள சமூக இயக்கங்கள் மட்டுமே சமூக மாற்றத்திற்கான பணிகளை செய்ய முடியும் .

அப்படிப்பட்ட சமூக மாற்றத்திற்கான முன்னெடுப்புகளைத் தான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த திமு கழகம் செய்தது. மக்கள் நலத்திட்டங்கள் மூலமாக சமூக சீர்திருத்தத்திற்கான படிக்கற்களை கட்டமைத்தது. அறிவுசார் நூலகங்கள் அமைக்கப் பட்டன. பள்ளிகளில் இடை நிற்றலைத் தவிர்க்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பள்ளிப்படிப்பு முடிந்த பிள்ளைகள் உயர்கல்வி கற்பதற்கும் கல்லூரிப் படிப்பு முடிக்கிற மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகள் - வேலை வாய்ப்புக்கான பாதையைக் காட்டவும் நான் முதல்வன், தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. எண்ணற்ற முதலீடுகளைக் கொண்டு வந்து புதிய புதிய தொழிற்சாலைகளை அமைத்து பல்லாயிரக்கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மூலமாக சமூகத்தை முன்னோக்கி நகர்த்தினார் மு க ஸ்டாலின் என்கிற திராவிடத் தலைவர்.

வழமையான சமூகச் சிக்கல்களை ஒரு மக்கள் நல அரசுக்கு எதிரான ஆயுதமாக மாற்றி, சமூக மாற்றத்திற்கு பணியாற்றிக் கொண்டிருந்த ஓர் ஆட்சியைத் தோற்கடித்து விட்டு இப்போதும் தொடர்கிற இந்த சமூக அவலங்களைக் கண்டும் காணாதது போல் பலரும் ஒதுங்கிப் போகிறார்கள்.

ஆனால், நாம் அப்படி ஒதுங்கிப் போக முடியாது. காரணம், நமக்கு சமூகப் பொறுப்பும் அக்கறையும் இருக்கிறது. இந்தச் சமூகம் மானமும் அறிவு உள்ள சமுதாயமாக வாழ வேண்டும் அதற்காக நாம் பணியாற்ற வேண்டும் என்கிற கடமை உணர்ச்சி இருக்கிறது. எனவே, சமூகத்தில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து நாம் கவனத்தில் கொள்கிறோம்! கவலையோடு பரிசீலிக்கிறோம்! என்றைக்கும் நாம் தோற்றுப் போக மாட்டோம்! காரணம், நாம் வெறும் கட்சிக்காரர்கள் இல்லை, கொள்கைக்காரர்கள்!

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## மாற்றமா? ஏமாற்றமா?

அண்மையில் ஆர்எஸ்எஸ் மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் முதல்வர் விஜயைச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பு குறித்து அந்த மாணவர்கள் சொல்லும்போது, கடந்த திமுக ஆட்சியில் கொண்டுவந்த 'நான் முதல்வன்' திட்டத்தினால் எந்தப் பயனும் இல்லை, அதனை மறுஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும், அதற்கு விஜய் உரிய நடவடிக்கை எடுக்க உறுதி சொன்னார் என்றும் கூறியிருக்கிறார்.

அதுபோல பிஎம் ஸ்ரீ திட்டத்தைத் திமுக அரசு எதிர்த்ததால் மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், அதனால் அத்திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும் (ஏற்றுக்கொள்ள மறைமுகமாக வலியுறுத்தல்) என்றும் சொன்னதற்கு, அதுகுறித்துக் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்க முதல்வர் உறுதியளித்தார் என்றார் அந்த மாணவர்?

இது குறித்து அரசு தரப்பில் இருந்து எந்தவிளக்கமும் சொல்லப் படவில்லை.

முதல்வராக இருக்கும் விஜய் மோடியைப் போல செய்தியாளர்களிடம் பேசப்பயந்து ஓடுகிறார். எது குறித்தும் பேசுவது இல்லை. இரண்டாம், மூன்றாம் மட்டத்தில் இருப்பவர்களைப் பேசச்செய்வது முதல்வர் என்ற பொறுப்புக்கு அழகில்லை.

இது ஒருபுறம் இருக்க, சங்கரன்கோயில் அரசு மருத்துவமனையில் சம்பந்தம் இல்லாமல் தவெக கட்சியினர் மருத்துவ உடையில் ஆய்வு என்ற பெயரில் அத்துமீறி உள்ளனர். மதுரைப் பகுதி மருத்துவமனை ஒன்றிலும் இதுபோன்று அத்துமீறல் நடந்த தாக தொலைக்காட்சியில் செய்தி வருகிறது.

500 மீட்டருக்குள் இருக்கும் டாஸ்மாக் கடைகளை இழுத்து மூடுவதாக ஒரு நாடகம் நடந்ததை சமூக ஊடகம் அம்பலப்படுத்தியது. டாஸ்மாக் சங்கம் சொல்கிறது, அத்தகைய கடைகள் 2000 இருக்கிறது என்று. இங்கேயும் நீடிக்கிறது குழப்பம்.

விஜய் பொறுப்பேற்றதில் இருந்து இன்றுவரை பொறுப்பாக என்ன செய்திருக்கிறது அரசு? ஒன்றும் புரியவில்லை.

ஆட்சி என்பது சினிமா அல்ல. முதல்வர் பொறுப்பு என்பது கதாநாயகன் வேடமும் அல்ல.

அரசு என்ன செய்கிறது என்பதை விஜய் செய்தியாளர்கள் முன்னால், மக்களுக்குச் சொல்லவேண்டும், பேசவேண்டும்.

மாற்றம் என்று சொன்னவர் ஏமாற்றக் கூடாது, மக்களை!

## "முரசொலி"த்தது திமுக / தலைவரின் தந்தையாரை

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காரைக்குடி இராம. சுப்பையா
### மே 21 (1997)



சுயமரியாதை இயக்கத் தொண்டர். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து உறுப்பினர். வைதீகக் கோட்டையான காரைக்குடிப் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரப்பியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் அணியின் தலைவராகப் பொறுப்பேற்று, இரயில் மறியல் செய்து, கைதாகி, தலைவர் கலைஞர் அவர்களுடன் திருச்சி சிறை புகுந்தவர்.

1972ஆம் ஆண்டு முதல் ஆறாண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக பணியாற்றியவர்.

90 வயது வரை சுயமரியாதைக்காரராகவும், தி.மு.கழகத்தின் தொண்டராகவும் வாழ்ந்து மறைந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# நீட் உணர்த்திய விஜய்யின் உண்மை முகம்!

**வழக்கறிஞர் இராம. வைரமுத்து**

மருத்துவம், பல் மருத்துவம் உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளில் சேருவதற்கு 2016 ஆம் ஆண்டு முதல் நீட் தேர்வு அவசியம் என்று ஒன்றிய அரசு அறிவித்தது. இந்த தேர்வை தேசிய தேர்வு முகமை(National Testing Agency - NTA) ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இந்நிலையில் 03.05.2026 அன்று நடைபெற்ற நீட் தேர்வு வினாத்தாள் கசிந்ததால் அந்த தேர்வு ரத்து செய்யப்பட்டு மறு தேர்வு 21.06.2026 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக விரிவான விசாரணை நடத்த ஒன்றிய அரசு உத்தரவிட்டதால் சி.பி.ஐ முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியுள்ளது. இதில் மஹாராஷ்டிராவின் நாசிக்கைச் சேர்ந்த சுபம் கைர்னார், ராஜஸ்தான் ஜம்வா ராம்கரைச் சேர்ந்த தினேஷ் பிவால், மங்கிலால் பிவால், மஹாராஷ்டிராவின் புனேவைச் சேர்ந்த முன்னாள் வேதியியல் பேராசிரியர் குல்கர்னி, பேராசிரியை மனிஷா மாந்தாரே, மனிஷா வாண்டாரே, மஹாராஷ்டிராவின் லத்தூரில் செயல்பட்டு வரும் ரேணுகாய் பயிற்சி மையத்தின் உரிமையாளர் சிவராஜ் ரகுநாத் மோடேகோன்கர் மற்றும் சில மருத்துவ மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான தினேஷ் பிவால் பா.ஜ.கவுடன் நெருங்கிய தொடர்பு உடையவர் என்று கூறப்படுகிறது. கைதான ராஜஸ்தானைச் சேர்ந்த மங்கிலால் மற்றும் தினேஷ் பிவால் குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் நீட் தேர்வில் வெற்றி பெற்று பிரபலமான மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படித்து வருகின்றனர். 06.11.2025 அன்று தினேஷ் பிவால் தனது முகநூலில் "எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் அரசு மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ் பயிலத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, எங்கள் குடும்பத்துக்குப் பெருமைக் குரிய ஒரு விஷயம் ஆகும். அந்த பிள்ளைகள் அனைவருக்கும் ஒரு பொன்னான எதிர்காலம் அமைய எனது மனமார்ந்த நல்வாழ்த்துகள்" என்று பதிவு செய்துள்ளதன் மூலம் இத்தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

2025 நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்துள்ள மங்கிலால் மகன் விகாஸ், மங்கிலால் மகள் பிரகதி, தினேஷ் பிவாலின் மகள் கன்ஜன், பிவால் குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு சகோதரரான கன்ஷியாமின் மகள் சானியா, கன்ஷியாமின் மற்றொரு மகள் பாலக் ஆகியோர் முந்தைய நீட் தேர்வில் குறைந்த அளவு மதிப் பெண்கள் மட்டுமே எடுத்தவர்கள் என்பதாலும், ஓராண்டுக்குப் பிறகு தற்போது வினாத்தாள் கசிவு வழக்கில் தினேஷ் பிவால், அவரது சகோதரர் மங்கிலால், மங்கிலாலின் மகன் விகாஸ் ஆகியோர் காவல்துறையின் பிடியில் சிக்கியுள்ளனர் என்பதாலும் கடந்த ஆண்டும் நீட் வினாத்தாள் கசிந்திருக்குமா என்ற சந்தேகம் வலுத்துள்ளது. கடந்த ஆண்டு நீட் தேர்வில் வினாத்தாள் கசிந்தது தொடர்பாக எவ்வித புகாரும் எழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியை மனிஷா மாந்தாரே நீட் தேர்வு வினாத்தாள் தயாரிப்புக் குழுவில் இடம் பெற்று இருந்தார். வினாத்தாள் தயாரிப்புக் குழுவில் இடம் பெற்றுள்ள எவரும் நீட் தேர்வு பயிற்சி மையம் நடத்தக்கூடாது என்ற விதிமுறைகளை மீறி இவர் தனது வீட்டில் ரகசியமாக மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக முற்றிலும் வேறுபட்ட கேள்விகளுடன் இரண்டு நீட் வினாத்தாள் தயாரிக்கப்படும். அதில் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு வினாத்தாள் தேர்வு நாளன்று மாணவர்களுக்கு வழங்கப்படும். மாதிரி வினாத்தாள் என்ற பெயரில் கசிந்த வினாத்தாளில் 300 வினாக்கள் இடம் பெற்றிருந்தது. அதிலுள்ள தலா 150 வினாக்கள் இரண்டு வினாத்தாளிலும் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு நீட் தேர்வில் மொத்தமுள்ள 180 வினாக்களில் 150 வினாக்கள் கசிந்துள்ளது.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு என்று கூறி, ஆட்சிப் பொறுப்பேற்ற த.வெ.க, வினாத்தாள் கசிவு காரணமாக இந்த ஆண்டு நீட் தேர்வு ரத்து செய்யப்பட்ட பிறகும் இது குறித்து எந்தவொரு கருத்தையும் வெளியிடாமல் வாய் மூடி மௌனியாக இருக்கிறது. அத்துடன் நீட் தேர்வு வினாத்தாள் கசிவைக் கண்டித்து சென்னையில் ஒன்றிய அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள சாஸ்திரி பவன் முன்பு போராட்டம் நடத்திய இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மீது காவல்துறை தடியடி நடத்தியுள்ளது. ஆளும் கட்சிக்கு ஏற்புடைய கருத்துக்காக போராடுபவர்கள் மீது இவ்வாறு கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் என்ன.

மாணவர்களின் மூலம் வாக்குகளை பெற்று ஆட்சியைப் பிடித்து விட்டு அவர்களைப் பாதிக்கும் பிரச்சினையில் இவ்வாறு அக்கறையின்றி நடந்து கொள்ளும் முதல்வர் விஜய் தான் நடத்துவது பா.ஜ.கவின் பினாமி ஆட்சி என்பதை தனது நடவடிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இனியாவது விஜய்யின் உண்மை முகத்தை தமிழ்நாட்டு இளைஞர்களும், மாணவர்களும் அறிந்து தெளிவினை பெறட்டும்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian